தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.6.2023) தலைமைச் செயலகத்தில், மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் நீதியரசர் சி.நாகப்பன், உறுப்பினர்கள் நீதியரசர் என்.ஆதிநாதன், எஸ்.தீனதயாளன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.6.2023) தலைமைச் செயலகத்தில், மாநில தகவல் ஆணையத்தின் புதிய உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பி. தாமரைக் கண்ணன், இ.கா.ப., (ஓய்வு), ஆர். பிரியாகுமார், டாக்டர் கே. திருமலைமுத்து, பேராசிரியர் முனைவர் எம். செல்வராஜ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

திண்டுக்கல் மாவட்டம்

ஆத்தூர் தொகுதியில் திட்டப்பணிகள்!

அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

ஆத்தூர், ஜூன் 24 - திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் 21.06.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்துகொண்டு, ரூ.42 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணி களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.89 இலட்சம் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அதன்படி, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், பாறைப்பட்டி ஊராட்சி கெண்டிச்சம்பட்டி கிராமத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கெண்டிச்சம்பட்டி முதல் வண்ணம்பட்டி வரை சாலை மற்றும் பாலம் அமைத்தல் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, சித்தையன்கோட்டை பேரூராட்சி அழகர் நாயக்கன்பட்டியில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாடகமேடை, செட்டியப்பட்டி ஊராட்சியில் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாடகமேடை மற்றும் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, ரூ.18.95 இலட்சம் மதிப்பிலான சாலைப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால் தமிழகத்தில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 10,000 கி.மீட்டர் அளவிற்கு சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகளவிலான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மயானத்திற்கு செல்லும் சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட பணியாளர்களுக்கு மழைக்காலத்திற்கு முன்னர் அதிகளவிலான பணிகளை மேற்கொண்டு பணி வாய்ப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் ஏழை, எளிய மக்களுக்கு வீடு வழங்கும் திட்டப்பணிகளும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசின் திட்டங்கள், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது, இன்றைய நிகழ்ச்சிகளில் மொத்தம் ரூ.42 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. ரூ.89 இலட்சம் மதிப்பிலான புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாறைப்பட்டி ஊராட்சி, கெண்டிச்சம்பட்டி கிராமத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பிலான சாலை மற்றும் பாலம் அமைப்பு பணிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி 21.06.2023 அன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அருகில் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன் உட்பட பலர் உள்ளனர்.

திருவாரூர் கலைஞர் கோட்டத்தைக் காண குவியும் கூட்டம்!

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெருமையை மனமகிழ்வோடு ரசிக்கும் மக்கள்!

திருவாரூர், ஜூன் 24 - மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞரின் பெருமைக்கோர் கிரீடமாய் திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டிருக்கும் கலைஞர் கோட்டத்தைக் காண கூட்டம் கூட்டமாய் மக்கள் வெள்ளம் தினமும் குவிந்து அந்த மகத்தான மாமனிதரின் புகழுக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் உயர்வுக்காக ஓயாமல் உழைத்த உன்னத தலைவர் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெருமைக்கு ஒரு மணிமகுடமாய் திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டிருக்கும் கலைஞர் கோட்டம், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் , பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி அவர்கள் பங்கேற்க திறப்புவிழா கண்டது. இந்த விழாவில் அரசியல் கட்சியின் பிரமுகர்கள், தமிழ்நாடு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என லட்சக்கணக்கானோர் பங்கேற்று "வாழ்நாள் போராளி கலைஞர்" அவர்களுக்கு மேலும் பெருமை சேர்த்தனர்.

திறப்பு விழா அன்றே சாதனை படைத்த கலைஞர் கோட்டத்தின் சிறப்பு "குன்றின் மேலிட்ட விளக்காய்" ஒளிவீசி மக்களின் மனதை முழுமையாய் நிறைத்தது.ஒவ்வொரு மனிதனின் உயர்வுக்கும் ஓயாமல் உழைத்து, வாழும் வரை இனத்தின் விடியல் ஒன்றே லட்சியமாய் வாழ்ந்த அந்த உத்தமரின் புகழை பறைசாற்றும் இந்த கோட்டத்தைக்காண ஒவ்வொரு நாளும் கூட்டம் குவிந்து வருகிறது.

சிறுவர், பெரியோர், பெண்கள், மாணவர்கள் என பாகுபாடுகள் இன்றி குடும்பம் குடும்பமாய் வரும் கூட்டம் கலைஞர் கோட்டத்தின் வடிவமைப்பை கண்டு வாயடைத்து வியந்து போவது மட்டுமின்றி, உலகமே போற்றும் உத்தமரின் மாண்பை பறைசாற்றும் படி அரங்கத்தின் அத்துனை அழகையும் ரசிக்கின்றனர். கலைஞர் அவர்களின் வாழ்நாளில் நடந்த முக்கிய நிகழ்வுகளை நம் கண்முன்னே கொண்டு வரும் காட்சி அமைப்பைக்கண்டும், கலைஞர் அவர்களின் அருகே அமர்ந்து அவரோடு செல்பி எடுத்துக் கொள்வது போல அமைக்கப்பட்டிருக்கும் அரங்கத்திலும் புகைப்படம் எடுத்துக்கொள்கின்றனர்.

"பாளையங்கோட்டை சிறையினிலே பாம்புகள் பல்லிகள் நடுவினிலே" இனத்தின் விடியலுக்காக சிறைவாசம் அனுபவித்த தானைத்தலைவர் கலைஞர் அவர்கள் சிறை வைக்கப்பட்ட பாளைசிறைச்சாலை அச்சு அசலாக அமைக்கப்பட்டிருக்கும் அந்த "தனிமைச்சிறை" யைக்கண்டு உள்ளம் கலங்குகின்றனர். தலைவர் கலைஞர் அவர்களின் அரிய புகைப்படங்களை, வாழ்நாளில்தாம் பார்த்திராத பல அரிய புகைப்படங்களை கண்டு பிரமிக்கின்றனர்.

அங்கு வரும் அனைவரையும் வரவேற்று , குறிப்பாக இளம் சிறார்களை வரவேற்று மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெருமைகளை, வருங்கால சந்ததிகளுக்கு மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., எடுத்துக்கூறும் விதம் அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படுகிறது.

உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியை புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள விழுப்புரம் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் இ. பாலாஜி, துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் ரா. சதீஷ், , ஏ.அசோக்குமார், ந.சக்தி வேல், சே.தேவா ஆகியோர் சந்தித்து வாழ்த்துகளைப் பெற்றனர். மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம். எல். ஏ, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.விசுவநாதன் உடனிருந்தனர்.

என்.கௌதமன் ஏற்பாட்டில் - நாகை மாவட்டத்தில் 700 கழக மூத்த முன்னோடிகளுக்கு

தலா ரூ.10,000 - பொற்கிழி: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

அமைச்சர் எஸ்.ரகுபதி - உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, ஜூன் 24 - கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நாகை மாவட்டத்திற்கு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கவும், பெண்களுக்கு தையல் இயந்திரம், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் காப்பீடு, மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணம் ஆகியவை வழங்க வருகை தந்தார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காட்டில் இருந்து நாகை மாவட்டத்திற்கு வந்த அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு நாகை மாவட்ட எல்லையான வாஞ்சூர் ரவுண்டானாவில் இருந்து விழா நடைபெற்ற இ.ஜி.எஸ்.பிள்ளை கல்லூரி வரை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் தலைமையில் , சட்டத்துறை அமைச்சர், நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் ஆயிரக்கணக்கான கழகத்தினர் முன்னிலையில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட்டது.

அப்போது 300க்கும் மேற்பட்ட கழகத்தைச் சேர்ந்த பெண்களும், 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகளும் அமைச்சர் உதயநிதிஸ்டாலினுக்கு மலர் தூவி வரவேற்பு அளித்தனர். அப்போது அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் மலர் மழையால் நனைந்தவாறு மகிழ்ச்சியுடன் வரவேற்பை ஏற்றுக்கொண்டார். அதைத் தொடர்ந்து நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் 700 கழக மூத்த முனோடிகளுக்கு ரூ. 10,000, வேட்டி, சட்டை, கருப்பு, சிவப்பு துண்டு, பேக் மற்றும் கேடயத்தை கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் வழங்கினார்.

பின்னர் 320 பெண்களுக்கு தையல் இயந்திரத்தையும், 500 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை, காப்பீட்டையும், 500 விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். அதைத்தொடர்ந்து நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துறைத் தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஏ.எல்.டயானாஷர்மிளா ஆகியோர் சகோதரர் ஏ.மரியசூசை -நிக்சன் ஜெ. பெபின் திருமணத்தை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். நிகழ்ச்சிகளில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இளையராஜா,

கழக தீர்மானக்குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நாகை அ.அசோகன், மாநில மீனவர் அணி துணை அமைப்பாளர் ஜி.மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், க.மறைமலை மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர்மணிவண்ணன், கற்பகம், மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ.பழனி யப்பன், எம்.பன்னீர்செல்வம், உமா செந்தாமரைசெல்வன், கோ.சி.குமார், இல.பழனியப்பன், எம்.பாண்டியன், எஸ்.பி.டி.சார்லஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், என்.சதாசிவம், உதயம் எம்.முருகையன், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார்,

பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், சுப்பிரமணியன், மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் சாகுல்அமீது, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் ஆர்.டி..ஆர் (எ) ஆர்.துரைராஜ், ப.உதயக்குமார், செல்வராணி, எஸ்.வி.டி.அருள், இரா.முருகையன், கேஸ் வி.செந்தில், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, பெ.முருகானந்தம், சத்தியமூர்த்தி, எஸ்.கே.ஜி.ஏ.சேகர், சாதிக்ஜபார், சிங்காரவேல், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் , கழக மூத்த முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், ஆதிதிராவிடர் நலத்துறைச் செயலாளர் க.லெட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் ஆனந்த், தாட்கோ ஆணையர் கந்தசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப் ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட அலுவலர்களுடன் மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. மத்திய தொழிற்பணி பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் ச.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், கூடுதல் ஆட்சியர் (வருவாய்) மரு.என்.ஓ.சுகபுத்ரா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) எச்.எஸ்.ஸ்ரீகாந்த், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.